# மிருகத்தின் அடையாளம் – 666

# Mark Of Beast – 666

வெளிப்படுத்தல் 13 - ஆம் அதிகாரத்தின் விளக்கம் - https://youtu.be/4SDKlYaAI_c

## தவறாக புரிந்துக்கொள்ளப்படும் மற்றும் போதிக்கப்படும் 666

வெளிப்படுத்தல் புத்தகத்தில் அதிகமாய் தவறாக புரிந்துக்கொள்ளப்படும் மற்றும் போதிக்கப்படும் தலைப்புகளில் ஒன்று தான் 666 முத்திரை.

நான் சிறுவனாக இருந்தபோது, ஒரு நாமக்கரண சபையைச் சேர்ந்த ஒருவர் இந்த 666 முத்திரையைப் பற்றி ஒரு பேய்க்கதையைப் போல விளக்கினார். அவர், "எதிர்காலத்தில் ஒருவன் வருவான். அவன் மனிதர்களின் நெற்றியிலும் கைகளிலும் ஒரு சிப் (Chip) பொருத்துவான். அந்தச் சிப்பைப் பொருத்திக்கொள்ளாவிட்டால் அவன் நம்மைக் கொன்றுவிடுவான். அதற்குள் நாம் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்" என்று கூறினார்.




இத்தகைய போதனைகள் எனக்குள் பயத்தையும், வெளிப்படுத்தல் புத்தகத்தின் மீது வெறுப்பையும் உருவாக்கின. ஆனால் பின்னர், வெளிப்படுத்தல் புத்தகத்தை அதன் உண்மையான சூழலிலும், வேதத்தின் சத்தியத்தின்படியும் ஆராய்ந்து அறிந்தபோது, அது எவ்வளவு ஆழமான நம்பிக்கையையும் ஆறுதலையும் தரும் புத்தகம் என்பதை உணர்ந்தேன்.

இன்று கூட, வெளிப்படுத்தல் 13-ல் குறிப்பிடப்படும் **666** குறித்து பல தவறான கருத்துக்கள் பரவலாகக் காணப்படுகின்றன. சிலர் அதை பிசாசின் எண்ணாகக் கருதுகின்றனர். சிலர் அது எதிர்காலத்தில் பயன்படுத்தப்படும் ஒரு **பார் கோடு (Bar Code)** என்று கூறுகின்றனர். இன்னும் சிலர் **666**-இல் முடியும் தொலைபேசி எண்கள், பாஸ்போர்ட் எண்கள் அல்லது பிற அடையாள எண்கள் அனைத்தும் தீயவை என்று நம்புகின்றனர்.

மேலும், 666 என்பது மனிதர்களின் உடலில் பொருத்தப்படும் ஒரு **கணினி சிப் (Computer Chip)** என்றும், அதுவே மிருகத்தின் முத்திரை என்றும் போதிக்கப்படுகிறது.

இதுபோன்ற ஏராளமான கற்பனைக் கதைகளும், ஆதாரமற்ற விளக்கங்களும் இன்று பரவி வருகின்றன.

ஆனால், வெளிப்படுத்தல் புத்தகம் உண்மையில் **666** குறித்து என்ன போதிக்கிறது? இந்த எண்ணின் உண்மையான அர்த்தம் என்ன? அதை அறிந்துகொள்ள, நாம் மனிதர்களின் கற்பனைகளையோ, பயத்தை அடிப்படையாகக் கொண்ட போதனைகளையோ அல்ல, வேதாகமம் கூறுவதை மட்டுமே ஆராய வேண்டும்.

## மிருகத்தின் அடையாளம் 666 என்பது என்ன?

666 என்ற மிருகத்தின் முத்திரையைப் புரிந்துகொள்ள, முதலில் **வெளிப்படுத்தல் 13-ஆம் அதிகாரத்தை** கவனமாக ஆராய வேண்டும். வெளிப்படுத்தல் 13-யில் யோவான் தான் கடற்கரை மணலில் இருப்பதாக தரிசனத்தை பார்க்கிறார் (வெளி 13:1). யோவான் தரிசனத்தை பார்க்கிறார் என்பதை நாம் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும் (வெளி 9:17). யோவானின் சரீரம் பத்மு தீவில் இருந்தாலும், அவர் ஆவிக்குள்ளாகி தரிசனத்தை பார்க்கிறார் (வெளி 1:9; வெளி 4:1,2).

யோவான் வெளிப்படுத்தல் 13 -யில் இரண்டு மிருகங்களை பார்க்கிறார். இந்த இரண்டு மிருகங்களும், வெளிப்படுத்தல் 12 - ஆம் அதிகாரத்தில் யோவான் பார்த்த வலுசர்ப்பத்தின் கூட்டாளிகளாய் இருந்தன, இந்த வலுசர்ப்பம் சாத்தான் என்பதை வெளி 12:9-யில் நாம் படிக்கிறோம்.

வெளிப்படுத்தல் 13 -ஆம் அதிகாரத்தில் யோவான் பார்த்த முதலாம் மிருகம் சமுத்திரத்தில் இருந்து எழும்பி வந்ததாக இருத்தது (வெளி 13:1). இந்த மிருகம் ரோம இராஜ்யத்தையும், அதின் ராஜாக்களை குறிக்கிறதாக இருக்கிறது. (வெளி 17:1-18). இதற்கு பின்பு யோவான் இரண்டாம் மிருகத்தை பார்க்கிறார், இந்த மிருகம் பூமியிலிருந்து எழும்பி வந்ததாகவும், ஜனங்களை மோசம் போக்க கூடியதாகவும் இருந்தது,(13:11-18). இது கள்ள தீர்க்க தரிசி, கள்ள மார்க்கத்தை காண்பிக்கிறதாக இருந்தது (வெளி 16:13). இந்த மிருகத்தின் வேலை ஜனங்களை மோசம்போக்க கூடியதாக இருந்தது (13:14). பூமியிலிருந்து எழும்பிய இந்த மிருகம், ஜனங்களை சமுத்திரத்தில் இருந்து எழும்பிய மிருகத்தை வணங்கும் படி செய்தது (13:12), மேலும் பூமியில் இருந்து எழும்பிய மிருகத்திற்கு சொரூபம் பண்ணவும், அந்த



சொரூபத்தை ஜனங்கள் வணங்கவும், வணங்காதவர்களை கொலை செய்யப்படவும் செயல்களை செய்ததாக நாம் பார்க்கிறோம் (13:13-14). மிருகத்தின் முத்திரையாகிய 666 என்கிற இலக்கத்தை ஜனங்கள் மீது நெற்றியிலும், வலதுகையிலும் பெறும் படி செய்தது (13:16-17). இந்த மிருகத்தின் முத்திரையாகிய இந்த இலக்கமானது

மனுசருடைய இலக்கமாயிருக்கிற அறுநூற்றறுபத்தாறு (13:18). இந்த இலக்கத்தை தரித்துக்கொள்ளுகிறவனே வாங்கவும், விற்கவும் முடிந்தது (13:17).

## 666-ஐ சரியாகப் புரிந்துகொள்வது எப்படி?

### 1. வேதாகம உரையின் சூழலை விட்டு வெளியே செல்லாதீர்கள். (Don't go outside the context of the biblical text.) –

a. வெளிப்படுத்தல் புத்தகத்தைப் புரிந்துகொள்வதில் மிக முக்கியமான விதி, **அதன் உரையின் சூழலை விட்டு வெளியே செல்லாமல் வாசிப்பதே** ஆகும். வெளிப்படுத்தல் புத்தகம் அடையாளங்கள், தரிசனங்கள் மற்றும் உருவகங்களால் நிறைந்துள்ளது. எனவே, அதில் கூறப்பட்டுள்ள சூழலைப் புறக்கணித்து, கற்பனை, உணர்ச்சி அல்லது சமகால நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்டு விளக்க முயற்சித்தால், அதன் உண்மையான செய்தியிலிருந்து நாம் விலகிச் செல்வோம்.

b. 666 என்ற எண்ணைப் புரிந்துகொள்வதற்கு முன்பாக, **வெளிப்படுத்தல் 11 முதல் 14-ஆம் அதிகாரங்கள் வரை** யோவான் விவரிக்கும் தொடர்ச்சியான காட்சிகளை முதலில் புரிந்துகொள்ள வேண்டும். இந்தப் பகுதிகளில் யோவான் தேவனையும், அவரை பின்பற்றுபவர்களையும். பிசாசையும், அதை பின்பற்றுபவர்களையும் பிரித்துக்காண்பிக்கிறார்.



   i. **வெளிப்படுத்தல் 11 அதிகாரத்தில் –** தேவனுடைய ஆலயம் எனவும் பரிசுத்த நகரம் எனவும், தேவனுடையவர்களை(கிறிஸ்தவர்கள்) அவர் பிரித்தார். பின்பு புறஜாதியார் பிரகாரம் என பிசாசை சார்ந்தவர்களை பிரித்தார் (11:1,2 பார்க்கவும்)

   ii. **வெளிப்படுத்தல் 12 -** யில் சபை மற்றும் பிசாசிற்கும் நடக்கிற யுத்ததை பற்றி கூறினார்

iii. **வெளி 13,14 -** யில் மிருகத்தை பின்பற்றுபவர்களை 666 முத்திரைக்கு கீழாகவும்(வெளி 13), பிதாவாகிய தேவனுக்கு சொந்தமானவர்களை 1,44,000 பேராகவும், இவர்கள் தங்களுடைய நெற்றிகளில் பிதாவின் நாமம் எழுத்தப்பட்டிருந்தவர்களாகவும், இவர்கள் சீயோன் மலையில் இருப்பதாகவும் கூறினார்(வெளி 14:1-6). ஆகவே இதன் மூலம் யோவான் இங்கு இரண்டு பிரிவாக பிரிக்கிறார். தேவனுடையவர்கள் (கிறிஸ்தவர்கள்) தேவனால் ஆசிர்வாதத்தையும் பாதுகாப்பையும் பெறுவார்கள், ஆனால் மிருகத்தின் முத்திரையுடையவர்கள் தேவனால் தண்டணை பெறுவார்கள் என்பதை காண்பிக்கிறார். (வெளி 14:9, 13)

**c.** ஆக 666-யை யோவான் கூறுவதற்கான காரணம் தேவனை சார்ந்தவர்களையும், பிசாசை சார்ந்தவர்களையும் பிரித்து காண்பிப்பதற்காக தான்.

## 2. அடையாள மொழியை நேரடியாகப் புரிந்துகொள்ளக் கூடாது

a. வெளிப்படுத்தல் புத்தகம் அடையாளங்கள் (Symbols), உருவகங்கள் (Metaphors), உவமைகள் (Figures of Speech) மற்றும் தரிசன மொழிகளால் நிறைந்துள்ளது. எனவே, இதில் காணப்படும் ஒவ்வொரு காட்சியையும் நேரடியாகப் புரிந்துகொள்ளாமல், அவை எதைக் குறிக்கின்றன என்பதை ஆராய வேண்டும். உதாரணமாக, வெளிப்படுத்தல் புத்தகத்தில் காணப்படும் வலுசர்ப்பம், மிருகம், ஆட்டுக்குட்டி, ஏழு தலைகள், பத்து கொம்புகள், நட்சத்திரங்கள், விளக்குத்தண்டுகள் போன்றவை அனைத்தும் அடையாளங்களாகவே பயன்படுத்தப்பட்டுள்ளன. அதுபோலவே, **666** என்ற எண்ணையும் அதன் அடையாள அர்த்தத்திலேயே புரிந்துகொள்ள வேண்டும். ஆதனால் சொல்லப்பட்ட உருவகம் மற்றும் உவமை அணியின் அர்த்ததை புரிந்துக்கொள்ள வேண்டுமே அல்லாமல் உவமை முக்கியம் இல்லை




**b. 6 என்ற எண்ணின் அடையாள அர்த்தம் என்ன**? வேதாகமத்தில் மனிதன் **ஆறாம் நாளில்** படைக்கப்பட்டான் (ஆதி. 1:26–31). எனவே, பல வேதாகம அறிஞர்கள் **6** என்ற எண்ணை மனிதனை அல்லது மனிதத் தன்மையை நினைவுபடுத்தும் அடையாளமாகக் கருதுகின்றனர். மறுபுறம், **7** என்ற எண் வேதாகமத்தில் பூரணத்துவம், நிறைவு மற்றும் தேவனுடைய கிரியைகளை அடிக்கடி சுட்டிக்காட்டுகிறது (ஆதி. 2:1–3). வெளிப்படுத்தல் புத்தகத்திலும் ஏழு சபைகள், ஏழு ஆவிகள், ஏழு முத்திரைகள், ஏழு எக்காளங்கள், ஏழு கலசங்கள் போன்ற பல அடையாளங்கள் இதை வலியுறுத்துகின்றன (வெளி 1:4,20; வெளி 5:6). வெளிப்படுத்தல் 13 -யில் மனிதர்களாகிய ரோம ராஜாக்கள் தங்களை தேவனாக காண்பித்தாலும் அவர்கள் தேவன் அல்ல மனிதர்கள் தான் என்பதை காண்பிப்பதற்காக இந்த எண் பயன்படுத்தப்பட்டுள்ளது. (எசே 28:2)

c. **ஏன் மூன்று முறை 6 வருகிறது (666)?** வெளிப்படுத்தல் புத்தகத்தில் சில வார்த்தைகள் அல்லது கருத்துகள் மூன்று முறை மீண்டும் கூறப்படுகின்றன. உதாரணமாக,

   i. **"பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர்"** (வெளி. 4:8)

   ii. **"ஐயோ, ஐயோ, ஐயோ"** (வெளி. 8:13)

d. எபிரேய இலக்கியத்தில் இவ்வாறு மூன்று முறை கூறப்படுவது அந்தக் கருத்தின் வலிமையையும் உறுதியையும் வெளிப்படுத்துகிறது. அதேபோல், **666** என்பதும் மனிதத் தன்மையின் உச்சத்தைக் காட்டும் ஒரு அடையாளமாகப் புரிந்துகொள்ளப்படலாம். அதாவது, **"மனிதன் மனிதன் தான்; தேவன் அல்ல"** என்ற உண்மையை வலியுறுத்துகிறது. தேவனுடைய அதிகாரத்தை அபகரிக்க முயன்றாலும், அவன் இறுதியில் மனிதனே என்பதைக் இந்த எண் நினைவூட்டுகிறது.

e. **நெற்றி மற்றும் கை எவைகளை குறிக்கும் என்பதை யோசித்துப்பாருக்கள் ?**

- `மிருகத்தின் முத்திரை நெற்றியிலும் வலது கையிலும் வைக்கப்படுகிறது என்று வெளிப்படுத்தல் 13:16 கூறுகிறது. இதையும் நேரடியாகப் புரிந்துகொள்ள வேண்டியதில்லை.

- வேதாகமத்தில் **நெற்றி** என்பது சிந்தனை, மனநிலை, விசுவாசம் அல்லது ஒருவரின் உள்ளார்ந்த அர்ப்பணிப்பைக் குறிக்கிறது. **வலது கை** என்பது செயல்கள், வாழ்க்கை முறை மற்றும் கீழ்ப்படிதலைக் குறிக்கிறது.
- அதே வெளிப்படுத்தல் புத்தகத்தில், தேவனுடைய ஜனங்களின் நெற்றியில் **பிதாவின் நாமம்** எழுதப்பட்டிருக்கிறது (வெளி. 14:1). இது அவர்கள் உண்மையில் நெற்றியில் எழுத்துக்களைப் பெற்றார்கள் என்பதைக் காட்டுவதில்லை; அவர்கள் தேவனுக்குச் சொந்தமானவர்கள் என்பதைக் குறிக்கும் அடையாளமாகும்.
- அதுபோலவே, மிருகத்தின் முத்திரையும் ஒரு சிப், பார் கோடு அல்லது உடலில் பதிக்கப்படும் தொழில்நுட்ப அடையாளம் என்பதைவிட, **மிருகத்தின் அதிகாரத்தை மனதாலும் (நெற்றி), செயல்களாலும் (கை) ஏற்றுக்கொண்டு அதற்குக் கீழ்ப்படிந்து வாழும் வாழ்க்கையை** அடையாளப்படுத்துகிறது.

## 3. எழுதப்பட்ட காலம், நடக்க போகும் காலத்தை கவனத்தில் கொள்ள வேண்டும்.

a. இந்த புத்தகத்தின் நோக்கம் ரோம் ராஜ்யத்தினால் துன்ப்பப்பட்டு கொண்டிருந்த முதல் நூற்றாண்டு சபைக்கு ஆறுதல் கொடுக்கவே எழுதப்பட்டது. (வெளி 2:10; வெளி 2:24)

b. மேலும், இந்த புத்தகத்தில் சொல்லப்பட்ட தீர்க்கதரிசனங்கள் , இந்த புத்தகம் ஏழுதி முடிக்கப்பட்ட காலத்தில் இருந்து சீக்கிரத்தில் நடக்க வேண்டியதாக இருந்தது (வெளி 1:1; 1:19; 4:1;22:6,10)

c. இவை நம்முடைய எதிர்காலத்திற்காக எழுதப்பட வில்லை, அப்படி நமக்காக எழுதப்பட்டிருந்தால், முதல் நூற்றாண்டில் வாழ்ந்தவர்களுக்கு பிரயோஜனமாய் இருந்திருக்காது.

## நிறைவான முக்கியமான கேள்வி?

நீங்கள் யார் பக்கம், மிருகத்தின் பக்கமா? அல்லது தேவன் பக்கமா? உங்கள் நெற்றியில் என்ன முத்திரை போடப்பட்டிருக்கிறது, பிதாவின் நாமமா? 666 ?

கிறிஸ்துவின் அன்பில்

R.ஜோஸ்

கன்னியாகுமரி கிறிஸ்துவின் சபை